SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# தமிழ் பண்பாட்டில் விருந்தோம்பல்

*முனைவர் என். ஆர். ஷிபஜா*
*நெறியாளர்*
*உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை*
*முஸ்லிம் கலைக் கல்லூரி*
*திருவிதாங்கோடு*

*ப. பியூலா*
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*முஸ்லிம் கலைக் கல்லூரி*
*திருவிதாங்கோடு*

## முன்னுரை

தமிழனின் இல்லற மாண்பினையும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பாட்டினையும் சங்க இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன. அனிச்ச மலரிலும் மெல்லிய மனம் கொண்ட விருந்தினரைப் போற்றிப் பேணிய சிறப்பினைச் சிறப்பாக ஆற்றுப்படைகள் சித்திரங்களாகத் தீட்டியுள்ளன. உண்டி சொடுத்தவரை உயிர் கொடுத்தோர் எனவும் 'பசிப்பிணி மருத்துவன்' எனவும் போற்றுகின்றன.

இங்ஙனம் விருந்து அறங்களிலே தலையாய அறமாகவும் பண்பாடாகவும் விளங்குகிறது. விருந்தினரை எதிர்நோக்கும் தலைவனையும், அவர்களை உபசரிக்கும் தலைவியையும் நற்றிணையில் காண்கிறோம். இவ்வாறு இன்னார் என ஆராயாது மன்னாரும் மக்களும் மனித நேயத்தோடு செல்விருந்தோம்பி வைகலும் வருவிருந்து பார்த்திருந்தனர். அதனைத் தம் குடிப் பெருமையாகவும் ஆண்மையாகவும் மதித்தனர்.

## சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்

சங்க கால மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளில் ஒன்றாக விருந்தோம்பல் திகழ்கின்றது. தமிழர்களின் பண்பாட்டு நெறிகளில் விருந்தோம்பல் பண்பு குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும். விருந்து என்றால், புதுமை, புதியவர் என்ற பொருள் உண்டு இதனை,

"விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே"

தொல்காப்பியம் (செய்யுளியல்) முனைவர். தமிழண்ணல் பாடல் எண் 1495 பக் 128) முதல் பதிப்பு செப் 2003.

என விருந்திற்குப் புது இலக்கணம் வகுத்துள்ளார் தமிழரின் மிகப்பழமையான இலக்கணக்காரர் தொல்காப்பியர். அதாவது " விருந்து" என்பதற்கு நேரடியான பொருள் "புதுமை" அதாவது புதிதாக வருபவரே விருந்தினர்.

"கருங்கோட்டுப் புன்னைக் குடக்கு வாங்கு
பெருஞ்சினை விருந்தின் வெண் குருகு"

(நற்றிணை ஆசிரியர் முனைவர் கதிர். மகாதேவின் பாடல் எண் 167 பக் 167 முதற்பதிப்பு நவம் 2003). என நற்றிணையில் ஓர் இயற்கை வரு வருகிறது. கருத்த புன்னை மரக்கிளையில் விருந்தாக ஒரு வெண்குருகு வந்து அமர்ந்திருக்கிறதாம். மரத்தை இல்லமாக்கி, கவிதை விருந்தோம்பி நம்மை மகிழ்விக்கிறது. எனவே அறிந்தவர்கள், உறவினர்கள், நண்பர்கள், வீட்டிற்கு வருவதையும் அவர்களுக்கு நாம் விருந்து பரிமாறுவதையும் "விருந்து" என்றே கூறக் கூடாது அக்காலத்தில் எல்லாம் கூட்டுக் குடும்பம் தானே எல்லா உறவுகளும் ஒரு குடும்பமாக வாழ்வதால் உறவுகள் விருந்தாக நினைக்காமல் புதிதாக வருபவரை விருந்தினர் என்றே அழைக்கிறார்கள்.

விருந்தோம்பும் முறை

சங்க காலத்தில் அறிவு சால் புலவர்களும் பாணரும், கூத்தரும் அவர்தம் சுற்றத்தினருமே பெரும்பான்மை விருந்தினராகக் காணப்படுகின்றனர் அவர்களின் வருகையால் மனம் மகிழ்ந்த மன்னர் அவர்தம் வயிற்றுப் பசியைக் களைவதற்கு முன்னர்

ஈரும் பேனும் இருந்திறை கூடி
வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர் துவர நீக்கி
நோக்கு துறைகல்லா நுண்மைய பூக்கணித்து
அரவுரியன்ன அறுவை நல்கி

(பத்துப்பாட்டு பொருநராற்றுப் படை ஆசிரியர் வித்துவான் ஆ. நாராயண வேலுபிள்ளை பாடல் எண் (79-83 பக் 91 முதற்பதிப்பு 1994)

அவர்களின் அருவெறுக்கத் தக்க இழிதோற்றத்தினை மாற்றுகின்றான். மானம் காக்க உயர்ந்த ஆடையை அளிக்கும் அவன் செயல் விருந்தினரின் ஏழ்மை உணர்வை அகற்றி கூச்சமின்றி நட்புறவு கொள்ளச் செய்கின்றது. கொடுப்போனுக்கும் கொள்வோனுக்கும் இடையே இருந்த ஏற்றத் தாழ்வுகள் நீங்க சமநிலை தோன்றி தோழமை வலுப்பட புதுத்தோற்றப் பொலிவு ஏற்படுகின்றது.

வறுமை கோலம் நீங்கியவுடன் வயிறார உணவு அருந்த கொடுத்து மிக்க மகிழ்ச்சியுடன் வித்தகனின் ஆற்றலறிந்து கொடை கொடை கொடுப்பதிலும் விருந்து படைத்தலைப் பெரும் பேறாகக் கருதி,

“…….. பதனறிந்து
துரா அய் துற்றிய துருவையம் புழுக்கின்
பரா அரை வேலை பருகென த் தண்டிக்
காழிற் சுட்ட கோழுன் கொழுங்குறை”

(பத்துப்பாட்டு பொருநராற்றுப் படை ஆசிரியர் வித்துவான் ஆ. நாராயண வேலுபிள்ளை பாடல் எண் 102 – 105 பக் 92 முதற்பதிப்பு1994)

இனி வேண்டாம் என வெறுக்குமளவு அருகிலிருந்து உபசரிக்கின்றான். கரிகாலன் புவியாளும் வேந்தனே ஆயினும் தன் ஏவலர் கொண்டு உணவு படைத்தாலும் மனப்பான்மையின்றி அவனே முன்னின்று பணிவோடு அன்பையும் சேர்த்து உண்ணுமாறு மனமகிழ்வோடு உண்பிக்கின்றான். அவர் தம் கலையாற்றலால் கண்டுணர்ந்த பரிசுகள் பல வரையாது வழங்கி அவரைப் பின் தொடர்ந்து சென்று விடை கொடுத்தனுப்புகின்றான்.

வறுமையில் விருந்தோம்பும் பண்பு

இன்றைய நாள் போல் அவரவர் தேவைக்கும் பொருளாதார வசதிக்கும் ஏற்பத் தங்கும் விடுதிகளும் உணவுச் சாலைகளும் இல்லாத அனறைய நாளில் குடிமக்களும் வழிச் செல்வோர் எவர் வரினும் விருந்தினராக ஏற்று தத்தம் நிலத்திற்குரிய சிறப்புணவைப் படைத்து உபசரிப்பதை ஆற்றுப்படை இலக்கியங்கள் அறிவிக்கின்றன. வறுமையில் வாழும் எயிற்றியர் கூட தாம் வருந்தி பெற்ற புல்லரிசியைக் குத்தி தூய்மைச் செய்து விளிம்பற்ற கரடுமுரடான வாயையுடைய பழம் பானையில் சமைததுக் கருவாட்டுக் குழம்புடன் படைத்து விருந்தோம்புகி;ன்றனர் வறுமையிலும்.

“தாளாற்றித் தந்த பொருளெல்லாம்தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு”

(திருக்குறள் ஆசிரியர் டாக்டர் பெ. கிருஷ்ணன் பாடல் எண் 212 பக் 45 முதற்பதிப்பு ஆகஸ்டு 2003)

என்றும் வள்ளுவன் வாக்கிற்கு இணங்க விருந்தோம்பலை கடமையாகப் போற்றினர்.

சாவா மருந்தெனினும் விருந்து புறத்தாகத் தான் மட்டும் உண்ணாத தமிழனின் பண்பாடு அருகி வருகின்ற இந்த நாளில் விருந்து என்னும் சொல் புதுப் பொருளோடு பொலிவிழந்து வருகின்றது.

சங்க காலத்தில் மக்கள் பொருளையெல்லாம் இழந்து வறுமையுற்ற காலத்திலும் விருந்தினர் வருவாரானால் அவர்களை இன் முகத்துடன் ஓம்புதலைத் தன் கடமையாக கொண்டிருந்தனர். வறுமையுற்ற விருந்தோம்பா நிலையிலும் ஒருவன் முதல் நாள் தன் பழைய

வாளை விற்றும் அடுத்த நாள் யாழ் என்னும் இசைக்கருவியை அடகு வைத்து விருந்தோம்பினான் என்பதை,

“நெடுநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் புழவாள் வைத்தானன் கின்றுகிக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்”

(புறநானூறு தெளிவுரை புலியூர்க்கேசிகன் பாடல் எண் 316 பக் 357) முதற்பதிப்பு 1958 மறுபதிப்பு 2009)

சாவா மருந்தெனினும் விருந்து புறத்தாகத் தான் மட்டும் உண்ணாத தமிழனின் பண்பாடு அருகி வருகின்ற இந்த நாளில் விருந்து என்னும் சொல் புதுப் பொருளோடு பொலிவிழந்து வருகின்றது. இன்று உற்றார் உறவினருக்குத் திட்டமிட்டு ஏற்பாடு செய்வதே விருந்தாக அமைகின்றது.

“ஒரு நாட் செல்லலம் இரு நாட் செல்லலம்
பல நாட் பயின்று பலரோடு செல்லினும்
தலை நாட் போன்ற விருப்பினன் மாதோ”

(புறநானாறு ஆசிரியர் புலியூர்க் கேசிகன் பாடல் எண் 101 பக் 151 முதற்பதிப்பு 1958 மறுபதிப்பு 2009 என அதியமானைப் பாராட்டிய ஔவையின் மொழிகள் இன்று ஏட்டளவில் தான். விருந்தும் மருந்தும் மூன்று நாள் என்று விருந்து கால வரையறைக்குள் கொண்டு வரப்பட்டது. நாளடைவில் அந்நிலையம் மாறி ஒரு வேளை சோற்றுக்கு கூடப்பிறர் இல்லத்திற்குச் செல்லப் பன்முறை சிந்திக்க வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது. நட்பையும் உறவையும் வலுப்படுத்திக் கொள்ள திருமணம் மணநாள் விழா பிறந்த நாள் விழா முதலிய சிறப்பு விருந்துகள் காலந்தோறும் நடைபெற்று வருகின்றன.

விருந்திடும் முறை

எதிர்பாராத நேரங்களில் திடீரென விருந்தினர் வருதல் கூடும். அத்தகைய நேரங்களில் முகத்தைக் கடுகடுவென வைத்திருத்தல் கூடாது. முக மலர்ச்சியுடன் உப்பில்லாத கூழ் இட்டாலும் அது அமிர்தம் போல இருக்கும். கடுத்த முகத்துடன் பால், பழமே அளித்தாலும் அது மேலும் பசியை அதிகரிக்கும். தவிர பசியைத் தீர்க்காது இதனை

“ஒப்புடன் முகமலர்ந்தே
ஊபசரித் துண்மைப் பேசி
உப்பில்லாக் கூழ் இட் டாலும்
உண்பதே அமிர்தமாகும்
முப் பழமொடு பாலன்னம்
முகர்வகடுத் திருவாராயின்
கப்பிய பசியினோடு
கடும்பசி ஆகுந் தானே”

(விவேக சிந்தமாணி உரையாசிரியர் கவிஞர்நெல்லை ஆ. கணபதி பாடல் எண் 5 பக் 7 முதற்பதிப்பு 2014)

“மோப்பக் குழையும் அணிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. (திருக்குறள் டாக்டர் பெ. கிருஷ்ணன் பாடல் எண் 90 பக் 79 முதற்பதிப்பு ஆகஸ்டு 2003) மலர்களில் அனிச்சம் மிக மென்மையானது. முகர்ந்தாலே அது வாடிவிடும் அதைப்போன்று விருந்தினரும் மிக மென்மையானவர்கள் முகம் திரிந்து நோக்கினாலே வாடி விடுவர். ஆகவே விருந்தினரை அவர்கள் மனம் கோணாத வகையில் உபசரிக்க வேண்டும்.

விருந்தினரைப் போற்றும் முறை

“இன்சொல் அனாவல் இடம் இனிது ஊன் யாவர்க்கும்
வன் சொல் களைந்து வகுப்பானேல் - மென்சொல்
முகந்து ஏய்க்கும் முட்போல் எயிற்றினாய் நாளும்
விருந்து ஏற்போர் விண்ணோர் விரைந்து”

*(பதினென் கீழ் கணக்கு ஏலாதி ஆசிரியர் கணிமேதாவியார் பாடல் எண் 7 பக் 912 முதற்பதிப்பு 2007 புகு; 912 முதற்பதிப்பு 2007) நம்மை நாடி வரும் விருந்தினரை மென்மையான சொல்லைக் கூறியும் உள்ளம் கலந்து உறவாடியும் தங்குவதற்கு வசதியான இடமளித்தும் விலையுயர்ந்த பொருள்களை கொடுத்தும் உபசரிக்க வேண்டும். இவ்வாறு விருந்தினரை உபசரிப்பவர்களைத் தேவர்கள் தம் விருந்தினராக ஏற்றுக் கொள்வார்கள் என பண்டையத் தமிழரின் விருந்தோம்பல் முறையைத் தெரிவிக்கிறது.*

*தமிழர்களுடைய விருந்தோம்பல் பண்பாட்டை எடுத்துக் காட்ட விருந்தோம்பல் என்ற அதிகாரத்தையே வள்ளுவர் படைத்துள்ளார்.*

*“செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்*
*நல்விருந்து வானத் தவர்க்கு.*

*(திருக்குறள் ஆசிரியர் பெ. கிருஷ்ணன் பாடல் எண் 86 பக் 19 முதற்பதிப்பு ஆகஸ்டு 2003)*

*வந்த விருந்தினரை வரவேற்று மேலும் வரவிருக்கும் விருந்தினருக்காகக் காத்திருப்பதையே வழக்கமாகக் கொண்ட ஒருவனுக்கு வேண்டிய வரங்கள் எல்லாம் அளிக்க தெய்வம் காத்திருக்கும்.*

*“ஆடும் வண்டு இமிராத் தாமரை*
*சூடாய் ஆடுதல் அதனினும் இலையே”*

*(புறநானூறு புலியூர்கேசிகன் உரை பாடல் எண் 69 பக் 120 முதற்பதிப்பு 1958)*

*சங்க காலத்தில் புலவர்களை உண் பித்தலும், உடுத்தியும், உபசரித்த அரசர்கள் தம்மை நாடி வந்த பரிசிலர்க்கு வண்டுகள் மொய்க்காத பொன்னால் செய்த தாமரைப்பூவினை பரிசாகக் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.*

*“தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்*
*வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்”*

*(திரிகடுகம் ஆசிரியர் நல்லாதனார். பாடல் எண் 12 பக் 576) முதற்பதிப்பு 2007. விருந்தினர் பசித்திருக்கத் தான் மட்டும் தனியாக உண்ணாமல் இருப்பவனே சிறந்த உதவும் மனப்பான்மையுடையவன் என்று மனிதனின் நற்குணங்களில் உயர்ந்த குணமாக விருந்தோம்பலைக் குறிப்பிடுகின்றது.*

*முடிவுரை*

*சங்கத் தமிழர் விருந்தோம்பலை அறத்தோடு கூடிப் போற்றியுள்ளனர். செல்வர், வறியவர் போன்று எவராயிருப்பினும் அவரவர் தகுதிற்கேற்ப கிடைத்ததைக் கொண்டுத் தம்மை நாடி வந்தவர்களுக்கு உணவிட்டு விருந்துபசரித்துள்ளனர். அவ்வாறு அரசனிடம் பரிசில் பெற்று செல்லும் புலவர்கள் பரிசில் பெற்ற பொருளைத் தமக்கென வைத்துக் கொள்ளாது தாமும் உண்டு பிறர்க்கும் மனமகிழ்வுடன் வழங்கினர் இவ்வாறாக விருந்தோம்பும் மரபு தமிழர் சமூகத்தில் அனைவரிடத்திலும் இருந்துள்ளதை அறிய முடிகிறது.*

*துணை நின்ற நூற்கள்*


*1. தொல்காப்பியம் செய்யுளியல் முனைவர் தமிழண்ணல் முதற்பதிப்பு செப்டம்பர் 2003. மணிவாசகர் பதிப்பக்கம் 31 சிங்கர் தெரு பாரிமுனை சென்னை – 600108.*

*2. நற்றிணை - முனைவர் கதிர் மகாதேவன் முதற்பதிப்பு நவம்பர் 2003. கோவிலூர் மடாலயம் பதிப்பாசிரியர்கள் முனைவர் தமிழண்ணல். கோவிலூர் - 630 307 முனைவர் சுப. அண்ணாமலை.*

*3. பத்துப்பாட்டு பொருநராற்றுப்படை - ஆசிரியர்வித்துவான் ஆ. நாராயண வேலுப்பிள்ளை பதிப்பாசிரியர் பேரா மு. சண்முகம் பிள்ளை முதற்பதிப்பு 1994 முல்லை நிலையம் 9 பாரதிநகர் முதல் தெரு தி. நகர். சென்னை – 600 017.*

*4. திருக்குறள் தெளிவுரை - டாக்டர் பெ. கிருஷ்ணன் முதற்பதிப்பு ஆக!;டு 2003 பாவை பப்ளிகேஷன்ஸ் 142 ஜானி ஜான் கான் ரோடு இராயப்பேட்டை சென்னை – 600014.*

*5. புறநானூறு - புலியூர்க் கேசிகன் உரையாசிரியர் முதற்பதிப்பு 1958 மறுபதிப்பு 2009 பாரிநிலையம் 184 பிராட்வே- சென்னை 600108.*

6. விவேக சிந்தாமணி - உரையாசிரியர் கவிஞர்நெல்லை ஆ.கணபதி முதற்பதிப்பு 2014. ஸ்ரீ அலமு புத்தக நிலையம் 3, பிள்ளையார் கோயில் தெரு 2 ஆம் சந்து முதல் மாடி திருவல்லிக்கேணி சென்னை – 600005.

7. பதினெண் கீழ் கணக்கு நூல் ஏலாதி - ஆசிரியர் கணிமேதாவியர் முதற்பதிப்பு (புதிய பதிப்பு) 2007 தமிழ் நிலையம் வர்த்தமானன் பதிப்பகம், 40 சரோஜினி தெரு தியாகராய நகர். சென்னை – 600 017.

********* ********* ********** ********* ********* ********** ********** **********